தலைவர் ரசல் எம். நெல்சனின் செய்தி
காணொலி சமூக இடுகை - 13 மார்ச் 2020

என் அன்பு சகோதர சகோதரிகளே, நாம் தொடர்ந்து தன் பிள்ளைகளின் வாழ்க்கையில் கர்த்தரின் கரத்தை பார்க்கிற விசேஷித்த காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது பரலோக பிதாவாகிய தேவனும், அவரது குமாரனாகிய  இயேசு கிறிஸ்துவும் நம்மை அறிவர், நம்மை நேசிக்கின்றனர், நம்மைக் கண்காணிக்கின்றனர். அதை நாம் உறுதியாக நம்ப முடியும்.

அதே சமயத்தில் நீங்கள் நன்கு அறிகிறபடி, உலகளாவிய சபையாக நாம் ஒரு தனித்துவமான சவாலை எதிர்கொண்டிருக்கிறோம். கோவிட்–19ம், அதன் விளைவான சுகவீனமும் ஆயிரக்கணக்கான உயிர்களை பாதித்திருக்கிறது, மற்றும் அநேக வழக்கமான நடவடிக்கைகளில் இடைபட்டிருக்கிறது. கஷ்டப்பட்டுக்கொண்டிருப்பவர்களுக்காகவும், அன்புக்குரியவர்களை இழந்திருக்கிறவர்களுக்காகவும் நாம் ஜெபிக்கிறோம்.

ஜெபத்துடன் பரிசீலித்த பின்பு, இந்த சவாலுக்கான தீர்வின் பகுதியாக இருக்க நமது ஆழ்ந்த விருப்பத்துடன், நாம் கர்த்தரை ஆராதிக்கிற மற்றும் சேவிக்கிற விதத்தில் நாம் அநேக தற்காலிக அனுசரிப்புகளைச் செய்திருக்கிறோம். உங்கள் விசுவாசத்துக்காகவும், உங்கள் ஜெபங்களுக்காகவும், உங்கள் ஒத்துழைப்புக்காகவும், புரிதலுக்காகவும் நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

இந்த தனித்துவமான சவால்கள் காலப்போக்கில் கடந்து போகும். எதிர்காலம் பற்றி நான் நேர்மறை எண்ணத்துடன் இருக்கிறேன். அவரை

நேசித்து சேவிப்பவர்களுக்காக தேவன் வைத்திருக்கிற மகத்தான அற்புதமான ஆசீர்வாதங்களை நான் அறிவேன். இந்த பரிசுத்த பணியில் பல வழிகளில் அவரது கரம் இருப்பதன் சான்றுகளை நான் பார்க்கிறேன். ஆகவே இந்த நிச்சயமற்ற காலங்களில், இரட்சகரிடமிருந்து இந்த வாக்குத்தத்தத்தால் ஆறுதலடையுங்கள். அவர் சொன்னார், "நான் சொல்வதை நீங்கள் செய்யும்போது கர்த்தராகிய நான் கட்டப்பட்டிருக்கிறேன்."

அவருக்கு செவிகொடுத்து, அவரது நியாயப்பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிகிற ஒவ்வொருவருக்கும் எட்டும்படியாக மகிழ்ச்சி எப்போதும் இருக்கிறது என நான் உங்களுக்கு வாக்குத்தத்தம் செய்கிறேன்.

சகோதர சகோதரிகளே, உங்களையும் உங்களது அன்புக்குரியோரையும் தயவுசெய்து நன்கு கவனித்துக்கொள்ளுங்கள். அருகிலும் தூரத்திலும் உங்களைச் சுற்றியிருப்போருக்கு உதவ சந்தர்ப்பங்களை தேடுங்கள். அவர்கள் எங்கு வசித்தாலும் நமது அயலாருக்கு ஊழியம் செய்யும் மகத்தான சிலாக்கியம் நமக்குண்டு.

நமது வழக்கமான நடவடிக்கைகளில் தற்காலிக மாற்றங்கள் வீட்டை மையமாகக்கொண்ட சுவிசேஷப் படிப்பு எவ்வளவு அருமையானதாக இருக்க முடியும் என்பதை அனுபவிக்க கூடுதல் நேரம் அனுமதிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் படிக்க மார்மன் புஸ்தக புதிய காணொலிகளையும் பிற தொழில்நுட்பங்களையும் பயன்படுத்த தயங்காதீர்கள்.

நாமனைவரும் பொது மாநாட்டை எதிர்நோக்கியிருக்கிறோம். அப்போது நாம் இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் மறுஸ்தாபிதத்தின் முழுமை

பற்றி சிந்திப்போம். அந்த சுவிசேஷம் துயரப்பட்ட உலகத்துக்கு நம்பிக்கையும் உதவியும் கொடுக்கிறது.

நான் உங்களை நேசிக்கிறேன். நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன். நீங்கள் அவருக்கு தொடர்ந்து செவிகொடுக்கும்போது, ஆறுதலும் சமாதானமும் பெறுவீர்கள் என நான் வாக்குத்தத்தம் செய்கிறேன்.